## இனிமையான குழந்தைகளே! எந்த ஒரு தவறு நடந்தாலும் கூட தந்தையிடம் மறைக்காதீர்கள். மறைத்தீர்கள் என்றால் மறைத்து, மறைத்து சுயம் நீங்கள் கூட மறைந்து போய் விடுவீர்கள்

கேள்வி: கெட்டுப்போனதை சீர்ப்படுத்தும் தந்தை குழந்தைகளாகிய உங்களுடைய கெட்டுப்போனதை எந்த ஆதாரத்தில் சீர்ப்படுத்துகிறார்?

பதில்: தூய்மையின் ஆதாரத்தில். தந்தை கெட்டுப்போனதை சீர்ப்படுத்த வரும்பொழுது இந்த பவித்திரத்தின் (தூய்மை) காரணமாகத்தான் அநேக சண்டைகள் ஏற்படுகின்றன என்பதை குழந்தை களாகிய நீங்கள் அறிவீர்கள். அபலைகள் துன்பத்தை சகித்துக் கொள்ள வேண்டி வருகிறது. பவித்திர மாக ஆகாமல் தேவதை ஆக முடியாது. பாரதத்தை சோழியிலிருந்து வைரமாக, துக்கதாமத்திலிருந்து சுகதாமமாக, பழையதை புதியாக ஆக்குவதற்கு அவசியம் பவித்திரமாக வேண்டும். குழந்தைகளாகிய நீங்கள் இதே விஷயத்தில் தந்தைக்கு உதவி செய்கிறீர்கள். எனவே தந்தையுடன் கூடவே உங்களுக்கும் பூஜை நடக்கிறது.

பாடல்: போலாநாத்தை விட தனிப்பட்டவர்...... ஓம்சாந்தி

குழந்தைகள் பாட்டைக் கேட்டீர்களா? எந்த குழந்தைகள்? பிரஜாபிதா பிரம்மா குமார் மற்றும் குமாரிகள் பாட்டைக் கேட்டார்கள். நான் இவர்களுக்கு முன்னால் தான் ஞானம் கூறுகின்றேன் என்று தந்தை கூறுகிறார். இங்கு எந்த ஒரு சூத்திர குமார் அல்லது இராவண குமார் அமர முடியாது என்பதை குழந்தைகள் அறிந்துள்ளார்கள். பெயரே பிரம்மா குமார் மற்றும் குமாரிகள் அதாவது பிரஜாபிதா பிரம்மாவின் குழந்தைகள் என்று கூறப்படுகின்றது. நமது பிரம்மா பாபாவின் தந்தையோ சிவன் ஆவார் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். ஆத்மாக்களாகிய நமது தந்தையும் கூட சிவன் ஆவார். அந்த தந்தை தான் கெட்டுபோனதை சீர்ப்படுத்துபவர் ஆவார். பாரதம் கெட்டுவிட்டது. அதைத்தான் சீர்படுத்து கிறார். பாரதம் வைரம் போல சுகதாமமாக இருந்தது என்று தந்தை கூறுகிறார். புதிய உலகத்தில் புதிய பாரதம், புதிய தேவி தேவதைகளின் இராஜ்யம் இருந்தது. இப்பொழுது பாரதம் கெட்டுப்போய்விட்டது. அசுரர்களின் இராஜ்யம் உள்ளது. கெட்டுப்போனதை சரி செய்பவர் அல்லது சீர்ப்படுத்துபவர் யார்? இது பிராமணர்களாகிய உங்களைத்தவிர வேறு யாரும் தெரிந்து கொள்ள முடியாது. உண்மையில் பாரதம் மிகவும் உயர்ந்ததாக இருந்தது. இப்பொழுது தாழ்ந்துள்ளது. வேறு எந்த தர்மத்தையும் அது மிகவும் உயர்ந்ததாக இருந்தது இப்பொழுது தாழ்ந்து விட்டது என்று கூறமாட்டார்கள். யார் இராஜ்யத்தை இழந்துள்ளார்களோ அவர்களே மீண்டும் ஆட்சி புரிகிறார்கள். அப்பொழுது தான் கெட்டுப்போனதை சீர்படுத்துபவர் என்று கூறுகிறார்கள். சத்யுகத்திற்குப் பின் அவசியம் திரேதா, துவாபரம், க-யுகம் வரவேண்டியே உள்ளது. எல்லோருடையதும் கெட்டுப்போகத்தான் வேண்டியுள்ளது. அவசியம் சதோ, ரஜோ, தமோவில் வரவேண்டியுள்ள்து. இப்பொழுது எல்லோருடையதும் கெட்டுவிட்டது. எல்லா தர்மங்களுக்குள்ளும் குழப்பங்கள் நிறைய உள்ளன. சீனர்கள் தங்களுக்குள்ளும் பௌத்தர்கள் தங்களுக்குள்ளும் சண்டை சச்சரவுகள் செய்துக் கொண்டேயிருக்கின்றார்கள். இப்பொழுது இருக்கும் இவ்வளவு தர்மங்களும் கெட்டுவிட்டன. அனைத்துமே தமோபிரதான, பட்டுப்போன

நிலையில் உள்ளன. எல்லோருமே சதோபிரதானத்திலிருந்து தமோபிர தானமாக ஆக வேண்டியே உள்ளது. இராவணன் தமோபிரதானமாக ஆக்கிவிடுகிறான். பிறகு இராமர் வந்து இராவணன் கெடுத்ததை சீர்ப்படுத்துகிறார். இராமர் என்று யார் அழைக்கப்படுகின்றார் என்பதை நீங்கள் அறிவீர்கள். இராம், இராம் என்று கூறி மாலையை உருட்டும்பொழுது பரமாத்மாவைத்தான் நினைவு செய்கிறார்கள். பெயரே ருத்ர மாலை என்பதாகும். ருத்ர சிவனின் கழுத்தின் மாலை ஆகும். எல்லா தர்மத்தினரும் அவசியம் நினைவு செய்கிறார்கள். அனைத்து தர்மத்தினருக்கும் சத்கதி அளிக்கும் வள்ளல் சிவனே ஆவார். கூடவே அவசியம் உதவியாளர்களும் இருப்பார்கள். ருத்ரரின் மாலை நிறைய சேவை செய்கிறது. குழந்தைகளாகிய நீங்கள் நிறைய சேவை செய்ய வேண்டும். சேவை, செய்கிறீர்கள் அதனால் தான் உங்களுக்கு பூஜை நடக்கிறது. ருத்ரர் யக்ஞத்தை ஏற்படுத்துகிறார். பாரதத்தில் மட்டுமல்ல ஆனால் முழு உலகத்திலும். ஏனெனில் நீங்கள் முழு உலகத்தைப் பாவனமாக ஆக்கு கிறீர்கள். சர்வ சக்திவான் தந்தையிடமிருந்து சக்தி பெற்று நீங்கள் சொர்க்கத்தை ஏற்படுத்துகிறீர்கள். எனவே அவசியம் குழந்தைகளாகிய உங்களை முழு சிருஷ்டியும் பூஜிக்க வேண்டும். ருத்ரர் தந்தை ஆவார். அவருக்கு மண்ணில் பெரிய சிவலிங்கம் அமைக்கிறார்கள். பின் சிறுசிறு சாலிகிராமங்களும் அமைக்கிறார்கள். பெயர் ருத்ர யக்ஞம் என்பதாகும். உங்களுக்கு பூஜை நடக்கிறது, ஏனெனில் நீங்கள் சேவை செய்து சென்றுள்ளீர்கள். ருத்ர யக்ஞம் ஏற்படுத்துகிறார்கள். நிறைய பூஜை செய்கிறார்கள். லட்சக்கணக்கான சாலிகிராமங்களை அமைக்கிறார்கள். முதலில் எட்டு மணிகளின் மாலை ஆகும். பிறகு 108ன் மாலை, பின் 16108ன் மாலை. அவர்கள் உதவி செய்துள்ளார்கள். யார் நிறைய உதவி செய்வார்களோ அவர்களே நெருங்கியவர்கள் ஆவார்கள்.

இப்பொழுது நீங்கள் ருத்ர மாலையில் நெருக்கமாக கோர்க்கப்பட வேண்டும் என்பதற்காக புருஷார்த்தம் செய்கிறீர்கள். தந்தையை நினைவு செய்ய வேண்டும். அவ்வளவே! மிகவும் சுலப மாகும். குழந்தைகளுக்கு தந்தையை நினைவு செய்வது மிகவும் சுலபமாகும். தந்தையும் நீயே தாயும் நீயே என்று கூறவும் செய்கிறீர்கள். நாம் தாய் தந்தையருக்கு முன்னால் அமர்ந்துள்ளோம் என்பதை இப்பொழுது நீங்கள் அறிந்துள்ளீர்கள். அந்த தாய் தந்தை நாம் இராஜ்யத்தை அடைவதற்காக கல்வி அளிக்கிறார்கள். பார்க்கப்போனால் இராஜாவாக ஆக்கும் கல்வியை இராஜா தான் அளிக்க வேண்டும். எப்படி வழக்கறிஞராக ஆக்கும் கல்வியை வழக்கறிஞர் அளிக்கிறார், ஆனால் இங்கோ அதிசயமான விஷயம் ஆகும். பரமபிதா பரமாத்மா தான் ஞானக்கடல் ஆவார். சர்வ சக்தி வான் ஆவார். அனைத்து வேதங்கள், சாஸ்திரங்கள், கிரந்தங்கள் ஆகிவற்றை அவர் அறிந்துள்ளார். அவர் நிராகார், ஞானம் நிறைந்தவர், ஆனந்தக்கடல், கருணைக்கடல் ஆவார். அனைவர் மீதும் கருணை புரிகிறார். முழு படைப்பின் மீது தயை காட்டுகிறார். ஏனெனில் முழு சிருஷ்டியே தமோபிரதானமாக ஆகியுள்ளது. 5 தத்துவங்கள் கூட தமோபிரதானம் ஆகும். அவற்றின் மீது கூட தயை காட்டுகிறார். அவையும் சதோபிரதானமாக ஆகிவிடும். எனவே அவர் எல்லையில்லாத சர்வோதயா என்று கூறப்படுகிறார். இதுவும் நாடகத்தில் பொருந்தி யுள்ளது. ஆத்மா பவித்திரமாக ஆகிவிடும்பொழுது ஒவ்வொரு பொருளும் பவித்திரம் ஆகிவிடுகிறது. இப்பொழுது இந்த தத்துவங்கள் ஆகியவை கூட எவ்வளவு நஷ்டங்களை

ஏற்படுத்துகின்றன! அங்கு தத்துவங்கள் கூட சதோபிரதானமாக இருக்கும்பொழுது யாரும் முதியவராக ஆக மாட்டார்கள். எனவே கெட்டுப்போனதை சீர்படுத்துபவர் தந்தை ஆவார். அவர் தான் சர்வ சக்திவான் என்று அழைக்கப்படுகிறார். அவரே சர்வ வல்லமை பொருந்திய (வர்ல்டு ஆல்மைட்டி அத்தாரிட்டி) இராஜ்யத்தை ஸ்தாபனை செய்கிறார். சுயம் அவரோ நிராகார் ஆவார். அவரை மகாராஜா அல்லது உலகிற்கு எஜமானன், உலகத்தை ஆட்சி புரிபவர் என்று கூற மாட்டார்கள். அவரோ செய்பவரும் செய்விப்பவரும் ஆவார். தேவி தேவதைகளின் இராஜதானியை ஸ்தாபனை செய்கின்றார். சுயம் அவர் ஆட்சி புரிவதில்லை. நாங்கள் முழு உலகத்திற்கும் எஜமானர் ஆகிறோம் என்று குழந்தைகளாகிய நீங்கள் கூறுகிறீர்கள். பிறகு உங்கள் மீது வேறு எவரொருவருடைய அதிகாரமும் நடப்பதில்லை. யாரும் கட்டளையிட முடியாது. சத்யுகம், திரேதாவில் வேறு யாரும் இருப்பதே இல்லை. எனவே சர்வ சாஸ்திர சிரோமணி கீதை என்பதை நீங்கள் நிரூபித்துக் கூற வேண்டும். பகவான் தான் இராஜயோகம் கற்பிக்கிறார். நாம் மனிதனிலிருந்து தேவதை ஆகிறோம் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். மனிதர்கள் கெட்டுப் போய் கிடக்கின்றனர். அப்பொழுது தான் தந்தை வந்து தேவதை ஆக்குகிறார். எல்லாமே தூய்மையைப் பொருத்துத்தான் உள்ளது. பவித்திரமாக ஆவதற்கு மிகவும் துன்பப்படுத்துகிறார்கள் பாபா ! என்று குழந்தைகள் எழுது கின்றார்கள். மிகவும் யுக்தியுடன் நடக்க வேண்டும் என்று குழந்தைகளுக்குப் புரிய வைக்கப் படுகின்றது. இதில் மிகவும் புத்திசாலித்தனம் வேண்டும். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு பெண் எவ்வளவு சரித்திரம் நிகழ்த்துகிறார் என்று ஒரு நாடகத்தில் காண்பிக்கப் பட்டுள்ளது. குழந்தைகளே! இதில் நஷ்டமோகா ஆக வேண்டியுள்ளது என்று தந்தை கூறுகிறார். அநேகருக்கு கணவன் மீது, குழந்தைகள் மீது மோகம் செல்கின்றது. கன்னிகைக்கோ தாய் தந்தை மற்றும் சகோதர சகோதரி மீது மட்டும் மோகம் இருக்கும். பின் திருமணம் ஆன பிறகு இன்னும் கூடுதலாக அதிகம் பேர் மீது மோகம் செல்லும். கணவன், மாமியார் - பின் குழந்தைகள் பிறந்த உடன் அதன்மீது எவ்வளவு மோகம் ஏற்படுகின்றது. இரண்டு மடங்கு விருத்தி ஆகிவிடுகிறது. எனவே முதலிலேயே நஷ்டமோகா ஆக வேண்டும், பின் சோதனைகள் கூட வருகின்றன. எப்படி இராஜாக்கள் வீடு வாசலை விடுகின்றார்கள், பிறகு முதலில் குருவிடம் செல்கின்றார்கள். அவர் பிறகு இவர்களை விறகு வெட்ட வைப்பார், ஆசிரமத்தை சுத்தம் செய்வது போன்ற வேலைகளை செய்விப்பார். தேக அபிமானம் விடுபட வேண்டும் என்பதற்காக, இங்கும் அப்பேர்ப்பட்ட நியமங்கள் உள்ளன. ஏழைகளோ இந்த எல்லா வேலைகளையும் செய்து கொண்டேயிருப்பார்கள். பெரிய வீட்டிலிருந்து வந்தவர்களுக்கு அதிகமாக தேக அபிமானம் இருக்கும். ஆக அவர்கள் சோதிக்கப்படுகிறார்கள். ஆரம்பத்தில் பாபா கூட சோதனை செய்தார் அல்லவா? தேக அபிமானத்தை விடுவதற்காக நீங்கள் எல்லாமே செய்து கொண்டிருந்தீர்கள். வண்டி கழுவுவது, துணி துவைப்பது. யார் வந்தாலும் முதலில் இந்த காரியம் செய்ய வேண்டிவரும் என்று கூறுங்கள். பெரிய வீட்டாருக்கோ வருவதே மிகவும் கஷ்டம், ஏழைகளுக்கோ அடிவாங்கு வதற்கான கஷ்டம் உள்ளது. பவித்திரமாக இருக்க விடுவதில்லை. அவர்களுடன் யுக்தியுடன் நடக்க வேண்டியிருக்கும். ஆனால் அவசியம் முழுமையாக நஷ்டமோகா ஆகி இருக்க வேண்டும். அரை குறையாக நஷ்டமோகா ஆகியிருந்தால் ஒரு கால் அந்த பக்கம் ஒரு கால் இந்த பக்கம் தொங்கிக் கொண்டேயிருப்பார்கள். பிறகு இவ்வாறு நிறைய பேர் தொங்கி

துக்கமடைகிறார்கள். தந்தையை மறந்து விடுவதால் சீசீ ஆகி விடுகிறார்கள்.

தந்தை குழந்தைகளுக்கு நிரந்தர நினைவு செய்வதற்காக எவ்வளவு யுக்திகள் கூறுகிறார். நினைவின் மூலமாகவே விகர்மங்களை வென்றவர் ஆவீர்கள். கல்பகல்பமாக ஸ்ரீமத் அளித்துக் கொண்டேயிருக் கின்றார். இராஜதானியோ அவசியம் ஸ்தாபனை ஆகிறது. யார் முந்தையை கல்பத்தைப் போல புருஷார்த்தம் செய்கிறார் களோ அவர்கள் மறைந்திருக்க முடியாது. சட்டென்று தெரிந்து விடும். தாச தாசிகள் கூட ஆக வேண்டியுள்ளது அல்லவா? இங்கு இருக்கிறார்கள் என்றால் இராஜதானியில் வந்து விடுகிறார்கள். ஏனெனில் மீண்டும் குழந்தைகளாக ஆகியுள்ளார்கள் அல்லவா? தாச தாசி (வேலை யாட்கள்) ஆகி பின்னால் ஏதாவது பதவி அடைந்துவிடுகிறார்கள். இல்லாவிட்டால் தாச தாசிகள் எங்கிருந்து வருகிறார்கள்? பிரஜைகளுக்கோ உள்ளே வருவதற்கான அனுமதி இருக்க முடியாது. தாசன் தாசிகள் உள்ளே இருப்பார்கள். நிறைய பேர் கூறுகிறார்கள் நாங்கள் கிருஷ்ணருக்கு தாசன் தாசி ஆனாலும் கூட நல்லது தானே என்று. தாயைவிடவும் அதிகமாக அவர்களது மடியில் வருவார். தற்காலத்தில் குழந்தைகளை ஆயாக்கள் (நர்ஸுக்கள்) தான் பராமரிக்கிறார்கள். அங்கோ கிருஷ்ணரை பராமரிப்பதில் மிகுந்த குஷி ஏற்படுகின்றது. கிருஷ்ண ஜன்மாஷ்டமியன்று எல்லா தாய்மார்களும் கிருஷ்ணரை ஊஞ்சலாட்டுகிறார்கள். அங்கு கூட தாசிகள் பராமரிக்கிறார்கள்.

பாப்தாதாவிற்கு மிகவும் நல்ல குழந்தைகள் வேண்டும். தந்தை கூறுகிறார்: இராஜதானி ஸ்தாபனை செய்வதில் எவ்வளவு உழைப்பு ((முயற்சி) செய்ய வேண்டியிருக்கிறது. பலவிதமான மரங்களின் சேர்க்கையாகும். பராமரிப்பவர்களே தொல்லைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சிலர் மீது போக போக கிரகக்சாரம் வந்து விடுகிறது. கேட்கவே வேண்டாம். இதுவோ வெல்லத்திற்குத் தெரியும், வெல்லப் பைக்குத் தெரியும். வெல்லம் என்பதே தந்தை தான். மிகவும் இனிமையானவர் அல்லவா! அவரது பை யாருக்குள் அவர் வருகிறாரோ அவருக்கும் தெரியும் மற்றும் இவருக்கும் தெரியும். மாயை இராவணன் எப்பேர்ப்பட்ட அறை அறைந்து விடுகிறது என்றால் தெரியவும் வருவதில்லை. கட்டளையை மீறிவிடுகிறீர்கள் என்றால் மன்னிப்பு கேட்டுவிடுங்கள். இல்லாவிட்டால் வினைப் பயனை நிறைய அனுபவிக்க வேண்டிவரும். புரிய வைத்தாலும் புரிந்து கொள்வதில்லை. இதுபோல மாயையின் கிரகணம் பிடித்துக் கொண்டுவிடுகிறது. சுயம் பாபா கூறுகிறார். சில சமயமோ யோகம் மிகவும் நன்றாக வருகிறது. சிலசமயத்திலோ மாயை எவ்வளவு புயலை எடுத்து வருகிறது என்பதை கேட்கவே வேண்டாம். பாபா கூறுகிறார் முதலில் நீங்கள் அனுபவம் செய்தீர்கள் என்றால் தானே மற்றவர்களுக்குக் கூறுவீர்கள் அல்லவா? எனவே புயல்கள் எல்லாம் முதலில் பாபாவிற்கு முன்னால் வருகிறது. பாபா கூறுகிறார்: உங்களை எல்லாம் தெரிந்துவிட்டவர் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. தூய உள்ளம் இருந்தால் உயர்ந்த விருப்பங்கள் நிறைவேறி விடுகின்றன. உள்ளும் புறமும் இதயத்தில் தூய்மையாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் உண்மையான உள்ளத்தில் தலைவன் திருப்தியடைய முடியும். நமது கெட்டுப் போனதை பாபா சீர்செய்துக் கொண்டிருக்கின்றார் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். நாம் முற்றிலுமாக குரங்குபோல இருந்தோம். பாபா கோவிலில் பூஜிக்கத்தக்கவராக ஆக்குகிறார். உலகத்திற்கு நாம் எஜமானர் ஆகிறோம். பின் கோவிலில்

அமருவதற்கு ஒரு சிறு அறை கிடைக்கிறது. சத்யுகம் சிவாலயம் என்று கூறப்படுகின்றது. முழு உலகிற்கும் எஜமானர்ஆகி ஆட்சி புரிகிறோம். பிறகு பின்னால் நமக்காக கோவில் கட்டுகிறார்கள். அதில் நாம் பூஜிக்கப்படுகிறோம். பூஜை செய்பவர்களாகக் கூட முதலில் நாமே தான் இருந்தோம். நாமே பூஜிக்கத்தக்கவராக இருந்தோம், பின் நாமே பூஜாரியாக ஆகியிருந்தோம். மீண்டும் பூஜிக்கத் தக்கவர் ஆகிறோம். புரிய வைப்பதோ மிகவும் நன்றாகவே புரிய வைக்கப்படுகிறது. மாயை நல்ல நல்ல குழந்தைகளின் தலையையும் கெடுத்து விடுகிறது. தேக அபிமானம் மிகவும் தீமைகளை ஏற்படுத்தி விடுகிறது. சிவபாபாவின் கட்டளையை மீறி அவப்பெயர் ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும். அவரிடம் எதையும் மறைக்காதீர்கள். தர்மராஜா கூட இருக்கிறார். பெரிய தண்டனை கொடுப்பார். அவரிடம் பயம் இருக்க வேண்டும். கட்டளையை மீறி விட்டீர்கள் என்றால் மன்னிப்பு கேட்க வேண்டும். பாபா இன்று என்னால் இந்த தவறு ஏற்பட்டுவிட்டது. சிவபாபா, பிரம்மா மூலமாக. பிரம்மாவோ முதலில் படிப்பார் என்ற பயம் இருக்கிறது. அட, அவரோ தந்தை ஆவார். அறிவுரை அளிக்கிறார். மம்மா கூட அறிவுரை அளிக்கிறார். உங்களிடம் கூட யாராவது கூறினால் பின் நீங்கள் சிவபாபாவிற்கு செய்தியைக் கொடுக்கிறீர்கள். மம்மா பாபாவிற்கும் கூட தெரிந்து விடுகிறது. புரிய வைப்பதோ நிறைய புரிய வைக்கப்படுகிறது. மதயானை ஆகக்கூடாது. யானைக்கு நிறைய தேக அபிமானம் இருக்கும். தேக அபிமானம் கூட மிகவும் தீமை அளிக்கக்கூடியது. அரை கல்பம் நடந்துள்ளது அல்லவா? அங்கோ நாம் ஆத்மா என்று புரிந்து கொள்வோம். இந்த பழைய சரீரத்தை விட்டு புதியதை எடுப்போம் என்று புரிந்திருப்பார்கள். அங்கு ஆத்ம அபிமானி என்று கூறுவார்கள். இங்கோ எல்லோருமே தேக அபிமானி ஆவார்கள். எனவே குழந்தைகள் ஸ்ரீமத் பெற்றுக் கொண்டே யிருக்க வேண்டும். தவறை ஒருபொழுதும் மறைக்கக்கூடாது. மறைத்து மறைத்து மறைந்தே விடுகிறார்கள். கெட்டுப்போனதை சீர்ப்படுத்துபவர் ஒரே ஒரு பகவான் அத்தாரிட்டி ஆவார். இப்பொழுது நீங்கள் அவரது குழந்தைகள் ஆகியுள்ளீர்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாய், தந்தை மற்றும் பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) உள்ளும், புறமும் இதயத்தின் தூய்மை மூலமாக தலைவரான தந்தையை திருப்திப்படுத்த வேண்டும். மாயையின் கிரகணத்திலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு தந்தையிடம் உண்மை யாக எல்லாமே கூறவேண்டும்.

(2) முழுமையாக நஷ்டமோகா ஆக வேண்டும். சிறிதளவு கூட தேகதாரி மீது பற்று வைக்கக்கூடாது. தேக அபிமானத்தை துண்டிப்பதற்கான முழுமையான புருஷார்த்தம் செய்ய வேண்டும்

வரதானம் : அன்பு என்ற மாய மந்திரத்தின் மூலம் பந்தனமற்றவரையும் பந்தனத்தில் கட்டக் கூடிய சிரேஷ்ட மந்திரவாதி ஆகுக.

தந்தையைக் காட்டிலும் குழந்தைகளாகிய நீங்கள் மிகப் பெரிய மந்திரவாதிகள். அந்த மாதிரியான அன்பு என்ற மாய மந்திரம் உங்களிடம் இருக்கிறது, அது பந்தனமற்றவர்களையும் பந்தனத்தில்

கட்டி விடுகிறது. தந்தைக்கும் குழந்தைகளைத் தவிர வேறு எந்த நினைவும் வருவது கிடையாது. நிரந்தர மாக குழந்தைகளைத் தான் நினைவு செய்கின்றார். எவ்வளவு முறை உணவின் போது தந்தையை அழைக்கிறீர்கள், சாப்பிடுகிறீர்கள், நடக்கிறீர்கள், தூங்குகிறீர்கள் - அப்பொழுதும் தந்தை கூடவே இருக்கின்றார். எந்த காரியம் செய்தாலும் காரியம் உங்களுடையது, செய்வியுங்கள், நாம் நிமித்தமாக கைகளால் செய்கின்றோம் என்று கூறுகிறீர்கள். பிறகு காரியத்தின் சுமைகளையும் தந்தையிடம் கொடுத்து விடுகிறீர்கள் எனில் சிரேஷ்ட மந்திரவாதி ஆகிவிடுகிறீர்கள் அல்லவா!

சுலோகன்: தனது சுய ஸ்திதியின் சக்தியின் மூலம் பிரச்சனைகளை மாற்றுபவர்கள் ஒருபோதும் குழப்பம் அடைய முடியாது.